பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 10 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மேம்பாட்டிற்காக தமது அரசு அயராது பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடுமுழுவதும் 76 ரயில் நிலையங்களில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. சர்வதேச பெண் குழந்தைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. வெஸ்ட் இண்டீ□ுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மேம்பாட்டிற்காக தமது அரசு அயராது பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் 42 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் மற்றும் வேளாண் துறை சார்ந்த திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பருப்பு உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்கான திட்டமும் தானிய உற்பத்தி வேளாண் மேம்பாட்டுத் திட்டமும் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த திட்டங்கள் விவசாயிகளின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியா பால் உற்பத்தியில் முதலிடத்திலும், மீன் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேன் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு மூலம் வேளாண் கருவிகளுக்கான விலை குறைந்துள்ளதாக கூறினார்.

இதன் மூலம் விவசாயிகள் பயனடைந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><<

புதுதில்லி ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லி ரயில் நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நடைமேடைகளில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில், பயணிகளுக்கான இடவசதி பரிசார்த்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

இதன் வெற்றி காரணமாக நிரந்தரமாக அந்த வசதி ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்ற வசதிகள் நாடுமுழுவதும் உள்ள 76 ரயில் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நடைமேடைகளில் பயணிகள் கூட்டநெரிசலை தவிர்ப்பதற்கு ஏதுவாக இந்த வசதி ஏற்படுத்தப்படுவதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு மக்களிடையே மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன்மூலம் குடும்ப செலவு குறைந்துள்ளதாகவும், சேமிப்பு அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*>><><><><<*

*நாட்டின் 3 முக்கிய துறைமுகங்கள் பசுமை ஹைட்ரஜன் முனையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் கீழ் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை கூறியுள்ளது.*

*இதன்படி குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுகம், தமிழகத்தில் உள்ள வ உ சிதம்பரனார் துறைமுகம் மற்றும் ஒடிசாவில் உள்ள Paradip துறைமுகங்களுக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*இதனை வரவேற்றுள்ள கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் துறைமுகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறியுள்ளார்.*

*இதனை கருத்தில் கொண்டு கடல்சார் துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.*

*>><><><><<*

*சிறுகுறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு உத்தரப்பிரதேச அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.*

*Bhadohi -ல் சர்வதேச தரைவிரிப்பு கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*மாநிலத்தில் 96 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுகுறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*இதன் மூலம் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.*

*>><><><><<*

*குஜராத்தின் வடக்குப் பகுதியும் தொழில் வளர்ச்சியின் முனையமாக உருவெடுப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக முதலமைச்சர் திரு. Bhupendra Patel கூறியுள்ளார்.*

*Mehsana-வில் நடைபெற்ற மண்டல தொழில் முதலீட்டு மாநாட்டில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், 3 லட்சத்து 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*இந்த மாநாட்டில் 70 நாடுகளைச் சேர்ந்த தொழில்துறை பிரதிநிதிகள் பங்கேற்றதாகவும் திரு. Bhupendra Patel கூறினார்.*

*>><><><><<*

*மத்தியப்பிரதேசத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.*

*இன்று போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், சுற்றுலா வர்த்தக கண்காட்சி நடத்தப்படவுள்ளதாக கூறினார்.*

*சுற்றுலாத் துறையின் முதலீடுகளை அதிகரிப்பதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு மோகன் யாதவ் தெரிவித்தார்.*

*>><><><><<*

*பழங்குடியினர் மேம்பாட்டில் கல்வி முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.*

*குஜராத்தின் Junagath மாவட்டத்தில் பழங்குடியினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

இதனை பழங்குடியினர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பழங்குடியினர் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை பின்பற்றி வருவது பாராட்டுதலுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இது உதவிடும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

>><><><><<

சுதந்திரப் போராட்ட வீரரும், அவசர நிலைக்கு எதிரான இயக்கத்தை மேற்கொண்டவருமான ஜெயபிரகாஷ் நாராயண் பிறந்த தினத்தையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், அரசியல் சாசன மாண்புகளை காப்பதற்காக அவர் ஆற்றிய பணி போற்றுதலுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் மேம்பாட்டிற்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் ஜெயபிரகாஷ் நாராயண் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>><><><><<

சர்வதேச பெண் குழந்தைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பெண் குழந்தைகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்காரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், பெண்குழந்தைகளை காப்போம்-அவர்களுக்கு கற்பிப்போம் திட்டம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

*தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 480 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் இன்று நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காணொலி வாயிலாக உரையாற்றினார்.*

*பருவமழை காய்ச்சலை தடுப்பதற்கான சுகாதார நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் வலியுறுத்தினார்.*

*வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.*

*>><><><><><<*

*உத்ராகண்டில் இயற்கை பேரிடர் காலங்களில் பணியாற்றுவதற்காக இளையோருக்கு பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.*

*11 மலை மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*நான்காயிரத்திற்கும் மேற்பட்ட இளையோருக்கு இந்த திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் இளையோருக்கு 5 லட்சம் ரூபாய் ஆயுள் காப்பீடு 3 ஆண்டுகளுக்கு செய்யப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>><><><><><<*

*Coldriff இருமல் மருந்து விற்பனைக்கு தில்லி அரசு தடை செய்துள்ளது.*

*இதன்படி இந்த இருமல் மருந்தை வாங்குவதோ, விநியோகம் செய்வதோ, விற்பதோ தடை செய்யப்படுவதாக தில்லி அரசு அறிவித்துள்ளது.*

*இந்த இருமல் மருந்தை பயன்படுத்த வேண்டாம் என்று பொதுமக்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.*

*>><><><><><<*

*அமெரிக்காவின் Tennessee -வில் நேரிட்ட வெடி விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.*

*ராணுவ தளவாடங்களுக்கான வெடிபொருள் உற்பத்தி நிலையத்தில் இந்த விபத்து நேரிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.*

*வெடிவிபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*>><><><><<*

*விளையாட்டுச் செய்திகள்*

*வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.*

*புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, 2 விக்கெட் இழப்புக்கு 318 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 518 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.*

*Yashasvi Jaiswal அபாரமாக ஆடி 175 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.*

*சுப்மன் கில் 129 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.*

*இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆடி வரும் வெஸ்ட் இண்டீஸ் சற்றுமுன் வரை 1 விக்கெட் இழப்பிற்கு 49 ரன் எடுத்துள்ளது.*

*>><><><><<*

*ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.*

*இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இதில் பங்கேற்றுள்ளன.*

*முதல் ஆட்டத்தில் இந்தியா தற்போது இங்கிலாந்தை எதிர்த்து ஆடிவருகிறது.*

*சற்றுமுன் வரை இருஅணிகளும் தலா 2 கோல் அடித்து சமநிலையில் உள்ளன.*

*>><><><><<*

சர்வதேச இணைய செஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Erigaisi பட்டம் வென்றார்.

>><><><><><<

துருக்கி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் Treesa Jolly - Harikaran அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>><><><><><<

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-7, 21-10 என்ற செட்கணக்கில் துருக்கியின் Yasemen Bektas – Emre Sonmez இணையை வென்றது.

>><><><><><<

ஆசிய டேபிள் டென்னிஸ் குழு சாம்பியன் போட்டி, புவனேஷ்வரில் இன்று தொடங்குகிறது.

>><><><><><<

சீனாவுக்கு எதிரான 17 வயதிற்குட்பட்டோருக்கான இரண்டாவது மற்றும் இறுதி கால்பந்து போட்டி இந்தியா ஒன்றுக்கு பூஜ்யம் என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

சீனாவின் Xianghe -ல் நடைபெற்ற இப்போட்டியில் 75 ஆவது நிமிடத்தில் Wangkheirakpan Gunluiba கோல் அடித்தார்.

இரண்டாவது போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், இருஅணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றன.

>> End of News <<